தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

மாரி வாயில்!

குடையெடுத் தன்ன வடபுல மேகுங்
கொண்டல் காள்!இந் நாடாள
நடையெடுத் தார்வட நாட்டின ரவர்பால்
நண்ணுவி ரேல்,“செம் புதுவெள்ளம்
டையெடுத் தன்ன, தினவெடுத் தேபல
மறத்தமி ழர்நல் லுணர்வெடுத்தே
டையெடுத் தார்செந் தமிழ்நா டாளப்
பார்த்தனம்! வேர்த்தனம்!” என்றுரைப்பீர்!

1—12—59



இலக்கியத்
திங்கள் ஏடு

25
காசுகள்

கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு.

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்து சொண்டிருக்கின்றன. அவற்றின் அளவு கண்டு மகிழ்வும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றோம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுத்திருக்கின்றன. அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன. சிலர் அளவிறந்த பக்கங்களில் எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றோம்.

1. மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்.
2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.
3. தென்மொழியில் வராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாறாயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தே தீரும்.
4. அவைபற்றிய எவ்வகை மடலும் எழுதப்படமாட்டாது.
5. அச்சுக்கு வராக் கட்டுரை, கதை, பாட்டு அத்தனையும் காக்கப்படுகின்றமையால், முன்னால் அஞ்சற்றலையனுப்பத் தவறியவரும் பின்னால் அனுப்பி அவற்றைத் தருவித்துக் கொள்ளலாம்.
6. நல்ல தமிழில், நல்ல கருத்துப்பற்றி, எழுதப்பட்ட கட்டுரை, கதை, பாடல்களே வெளிவரத்தக்கன.

— ஆ. ர்.

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் ௧ | திருவள்ளுவராண்டு ௲௯௯௰ கார்த்திகைத்திங்கள் ௧௫. (1–12–59) | இசை ௯

இழி தொழில்கள்.

தண்டமிழ் நிலவிய பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்தோர் இழிந்ததொழில் என்று கருதியதொழில் ஒன்றே யொன்றுதான். அது மானம், அறிவு, முயற்சி அத்தனையும் விட்டுவிட்டு வெறும் குடலுக்கும் வாய்க்கும் அடிமைப்பட்டு, அறியாதவனிடமோ, அறிந்தவனிடமோ போய் **"எனக்கொன்று ஈவாயாக"** என்று இரப்பது. இதனை,

> "ஈயென விரத்தல் இழிந்தன்றே!" (புறம்–204)
> "ஈயென் கிளவி **யிழிந்தோன்** கூற்றே" (தொல்–எச–சூ-49)

என்பவற்றால் அறியலாம்.

"தாமாகப் போய் இரப்பதுதானே இழிவு. அவராகவே கொடுப்பின், அதை ஏற்பது இழிவோ?" என்று வினவுவார் "அவ்வாறு ஏற்பது இழிவு மட்டுமன்று; தீமை பயப்பதும் ஆகும்" என்பது அவர் கொள்கை என்றறிக. இதனை,

> "ஏற்பது **இகழ்ச்சி**" (ஔவையார் — ஆத்திச்சூடி)
> "கொள்ளுதல் **தீது**; கொடுப்பது நன்றால்'
> (கம்ப-வேள்வி–29)
> "நல்லா றெனினுங் கொளல் **தீது**" (குறள்–222)

என்பவை விளக்கிக்காட்டும்.

இனி, இவற்றைவிட வேறெதுவும் இழிந்ததில்லையோ வென்டார்க்கு, வேறொன்றும் உண்டு. அது அத்தகைய இழி

வைக் கருதாமல் பிறர்பால் போய் ஒருவன், 'ஈ'யென்று கேட்டும், "ஈயேன்" என்று வைத்துக் கொண்டே மறைத்து விடுவது ஆகும். இதனை,

—அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்றே!
—(புறம். 204)

"இல்லென விரந்தோர்க் கொன் றீயாமை
யிளிவு"
—(கலித்தொகை. 2.)

"இரப்போன் இன்மை கண்டுங்
கரப்போன் சிறுமை யானுறு கவ்வே"
(தகடூர் யாத்திரை)

முதலியவற்றான் நன்கு அறியலாம்.

இனி, ஒருவரிடம் போய் 'ஈ'யென இரத்தலையும், 'ஈயேன்' என்று கரத்தலையும் விட இழிவு வேறுண்டோவெனின் 'உண்டு' என்க. அஃதென்னையோவெனின் கூறுதும். தம் பசிக்காகவும் தம்மைச்சார்ந்த உறவோர் பசிக்காகவுமே ஒருவன் இரத்தல் கூடும். அவ்வாறு அவன் இரக்காவாறு அவன் தன் மெய் முயற்சியாலும், அறிவுத் திறத்தாலும் வேண்டுவது ஈட்டிக்கொள்ள, வலிய கைகால்களையும், மூளையையும் இயற்கையே எல்லோர்க்கும் கொடுத்திருக்கின்றது. ஆகையினால் 'இரத்தல் இழிந்தது; பிறர் இடுவதையும் ஏற்றல் தீது' என்று யாவரும் மொழிந்தனர்.

வள்ளுவரோ, "ஒருவன் தன் உணவுக்காகவுமன்றித் தன்னைச் சார்ந்தார்க்கு மன்றி, நடுவழியில் நீரின்றி உயிர் துடிக்கும் 'ஆ' ஒன்றிற்கு, அருகில் உள்ள வீட்டின்கண்ணே சென்று 'அம்மையீர்! இங்கு ஓர் ஆ நீர்வேட்கையான் துடிக்கின்றது. அதற்கெனச் சிறிது நீர் ஈக' என்று கேட்பினுங்கூட அது நாவிற்கு வந்த இழிவே" எனும் பொருள்பட,

"ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவின் இளிவந்த தில்" (குறள். 1066)

என்று கூறுகின்றார்.

மேலே இழிவென்று கண்டவை, நாகரிக மேம்பாட்டாலும், பொருட்குறைவாலும், மக்கட் பெருக்காலும், ஒருவர் தமக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் தாமே செய்து

கொள்ள இயலாமையானும், தம்மால் செய்யமுடிந்த பொருள்களைப் பிறர்க்கும் ஈயவேண்டியிருப்பதாலும், பண்டைத் தமிழர் கூறியவாறு இரப்பதை முழுதும் 'இழிவு' என்று இக்காலத்துக் கூறுவாரும், கூறுவார் கூற்றைக் கொள்வாரும் இலர். ஆனால் முற்காலத்தில் இழிவு என்று கருதியவற்றைவிட மிக இழிந்த தொழில்களை இக்கால் மாந்தருள்ளேயே சிலர் செய்கின்றனர். மக்கள் எல்லோரும் ஒரே நிறையும், ஒரே அறிவும், ஒரே உருவும், ஒரே உணர்வும் பெற்றவராயிருப்ப, ஒரு சிலர் உயர்ந்த தொழில்களைச் செய்யவும், ஒருசிலர் இழிந்த தொழில்களைச் செய்யவும், ஏற்பட்டதுகூட நாகரிகமோ, அறிவுடைமையோ, முறையுடைமையோ, அருளுடைமையோ வென்று கேட்கின்றோம்.

வானின் கோள் நிலைகளைக் காணமுயலும் இக்காலத்திற் கூடப் பலவிடங்களில், மனம் என்பதொன்றைவிட்டு வயிற்றுப் பிழைப்புக்காக மலக்குவியலை அள்ளி எடுப்பாரும், மாந்தரை மாந்தர் வைத்து விலங்குபோல் இழுத்துக்கொண்டு ஓடுவாரும் இருக்கத்தான் வேண்டுமோ? பண்டையில் மக்கட் பெருக்கமின்மையானும், சோம்பலின்மையானும், மக்கள் வெட்ட வெளிகளிலும், ஆற்றுப் படுகைகளிலும், வயற்புறங்களிலும் மலங்கழித்தனர். இற்றையோ புன்மை நாகரிகப் போலிப் பகட்டாலும் பல் துலக்காமல் தேநீர் முதலியவற்றை அருந்தும் படுசோம்பற் கொடு வாழ்வாலும், வேலை விரைவாலும், நகரப் பெருக்காலும், உண்டுறங்கி, உறையும் இடங்களிலேயே கழி நீரகங்களை அமைத்துக்கொண்டு மலங் கழிப்பார் ஆயினர். எனினும் வாழ்க்கை நிலைகட்கும், அறிவியல் விரிவுக்கும் ஏற்ப அக் கழிவுகளை மக்களுள் ஒருசிலரைக்கொண்டே துப்புரவு செய்வதைவிடப் பொறிகள், அடிநில நீரோட்டம் முதலியவற்றைக் கொண்டு தூய்மைசெய்ய முற்படுதல் அறிவுடைமையன்றோ?

இவ்விழிவான தொழில்கள் உள்ளவரை '**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**' எனும் வாய்ப்பிதற்றலுக்கு எட்டுணையும் பொருளில்லை. இதனை இல்லை என்று மறுப்பார் எவரேனும் இத்தகைய இழிதொழிலை ஏற்க முன்வருவரோ? வாரார், வாரார்.

இவை போன்ற இழிதொழில்களை அகற்றுதலும், அவற்றைப் பொறிகளைக் கொண்டு செய்வித்தலுமன்றி, வேறு பல்

தொழில் சீர்திருத்தங்களிலும், வளம் பெருக்கும் வகைகளிலும் ஈடுபாடு காட்டுதல் இரங்கத்தக்கது.

அவர் உண்மையிலேயே நாகரிகமுடையவராயின் தம் போல் ஒருவன் இருப்பவும் அவன் இழுப்ப இவர் இவர்ந்தூர் வதும், தாம் கழிக்கும் மலக்குவியலை தம்மைப்போன்றவரே அள்ளிப் புறஞ் சேர்த்தலும், சிறுநீர்த் தேக்கங்களை இறைத்துப் போய்ப் புறம் வார்த்தலும் செய்வதை விரும்புவரோ? அத் தகையோர், ஒழுக்கத்து விழுப்பம் பெற்றவரென்றும், மக்களில் நாகரிகம் மிக்கவரென்றும் கூறிக்கொள்ளுதலில் தினைத்துணை யும் பொருளில்லை என்று கூற விரும்புகின்றோம்.

திருமதியும் – திருவாட்டியும்

ஸ்ரீமதி எனும் வடசொற்கு நேரிய தமிழ்ச்சொல் திரு வாட்டி என்பதைத் 'தென்மொழி' கூறியபின் தமிழ் நாட் டில் உள்ள தாளிகைகள் சில அது பற்றிப் போராட்டம் நடத்தி வருவதோடு, 'திருமதி' தமிழ்ச் சொல்லே என்றும் கூறிவருகின்றன. அதற்குச் சொல் வேரும், மொழி வழக்கும் காட்டாது, அவை அவ்வாறு கூறுவது தமிழை உயர்த்தி விடாதது மன்றித் தாழ்த்துவதுமாகும். 'திருமதி' தமிழும் வடமொழியும் கலந்த கலப்புச் சொல்லே. இதில் உள்ள 'மதி' என்ற விகுதி, தூய தமிழ்ச் சொல்லான 'மதி' (- நிலவு, அறிவு) என்ற சொல் அன்று என்பதை அவை அறிதல் வேண்டும். ஸ்ரீமத் என்பதே தமிழில் 'ஸ்ரீமதி' என்று திரிந் தது. இது தூய வடசொல்லே. அந்த வடசொல் விகுதியான 'மதி' யே 'திருமதி' யில் வந்து இடம் பெற்றது. இதற்கு, அதை முதன் முதலில் மொழி பெயர்த்துப் பழக்கத்திற் கொணர்ந்தவரே முழுப் பொறுப்பாளர் ஆவர். இதுபற்றி விளக்கமான கட்டுரை ஒன்று 'தென்மொழியில்' விரைவில் வரும் என்பதை அறிவிக்கின்றோம்.

— ஆ. ர.

தூண்டிற் புழு! —[தாளாளன்]—

புழு என்று என்னைத் தள்ளாதீர்.

எலும்பில்லாத சிற்றுயிர் என்று என்னை எள்ளாதீர்!

நான் சொல்லும் சில செய்திகளை நீங்கள் அறிந்தே ஆகவேண்டும்

மாந்தர் குலம் போல் எனக்கு பெரிய உள்ளமும்,
அருள் எண்ணமும் இல்லை என்று கருதிவிடாதீர்.

என் உடலை அருவருப்பின் புதையல் என்று கூறி,

முகஞ் சுளிக்காதீர்.

என் கதையைக் கேட்டால் வருந்தினும் வருந்தலாம்;

திருந்தினுலும் திருந்தலாம்.

நான் பிறந்து ஏழு நாட்களே ஆகின்றன.

மூன்ருவது நாள் என்னைப் பெற்ற தாய் எனக்கொரு கதை சொன்ஞள். அதை இப்பொழுது நினைக்கின்றேன்.

"நடுக்கடலில் உள்ள ஒரு பெரிய திமிங்கலமீன், படகில் மீன் பிடிக்க வருவோரையும் போவோரையும் தன் வலிந்த வாலால் அடித்துத் தாக்கியதாம். பலரும் அதனுல் உயிரிழந்தனராம். பெரிய கப்பல்களையும் ஒரு நொடிப்பொழுதில் அடித்து வீழ்த்து மாம். அது அந்தக் கடற்பகுதிக்கே பெரிய பேரரசனும். அதனைச் சுட்டு வீழ்த்த எந்த மாந்தனும் முடியவில்லையாம். வலிந்த கோடரிகொண்டு அதன் வயிற்றைக் கிழிக்க எந்தப் போர் மறவனும் முன்வரவில்லையாம். தம் அறிவுத் திறமையால் பல வழிகளிலும் அதனைப்பிடிக்க வந்தவரெல்லாம் மாண்டு போனுராம்.

இந்நிலையில் கீழைநாட்டிலிருந்து ஒரு கடற்கண்ணிக் காரரின் கூட்டம் அதைப்பிடிக்க முன் வந்ததாம். அந்தக் கூட்டத்தின் தலைவருக்கு ஒரு வியப்பான வழி தோன்றியதாம். பெரிய தூண்டில் ஒன்றைச் செய்தாராம். அதன் முள் ஏர் உழும் கலப்பையின் நுனிபோல் வளைந்து காணப்பட்டதாம். அதைப் பெரிய இருப்புத் தொடரியால் கட்டித் தொங்கவிட்டாராம். அதன் முள்ளில் எந்த உயிரை மாட்டுவதென்று பலநாட்கள் ஆழ்ந்து எண்ணி, முடிவில் ஒரு கொழுப்பேறிய மாந்தனையே மாட்டுவதென்று முடிவு செய்தாராம். அவர் இதை எண்ணியதைவிடச் செய்கையில் நிகழ்த்தும்போது மிகுந்த தொல்லை ஏற்பட்டதாம். அதில் தன்னுடலை மாட்டிக்கொண்டு உயிரிழக்க ஒரு மாந்தனும் முன்வரவில்லையாம். எனவே அவர் ஊரெங்கும் அவ்வாறு துணிந்து தூண்டிற்கிரையாகும் மாந்தனுக்குப் பொன்

னும் பொருளும் நிறைய தருவதாக அறிவிப்புச் செய்தாராம். பொன்னுக்கும் பொருளுக்கும் பலர் இச்சைப்பட்டனரேனும். உயிரைவிட அவை பெரிதாக அவர்க்குப் படவில்லை. இதனால் அந்தத் திமிங்கலப் பிடிப்பு மிகவும் தடைப்பட்டதாம். தொடர்ந்து அதன் தொல்லைகள் நடந்துவந்தனவாம்.

முடிவில் மக்களெல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் கூடினர். வாழ்க்கையில் பெரும் இன்பங்களை நுகர்ந்து வருபவனும் உடல் நலிவின்றியும், கவலைகள் இன்றியும் வாழ்ந்து வருவருபவனும் ஆன ஒருவன் யாரோ அவனையே தூண்டிற்கிரையாக ஆக்குவதென முடிவு கட்டினர். இந்தக் கொள்கைப்படியும் ஒருவரும் காணப்படாத நிலையில், அந்நாட்டு அமைச்சன் மக்களிடம் 'நீங்கள் நினைத்தவாறு ஒரே ஒருவன் இருக்கின்றான். ஆனால் அவன் இந்நாட்டையாளும் அரசனாயிற்றே' என்றானாம்.

'மக்கள், அரசன் ஒருயிரால் பல்லாயிர உயிர்கள் காக்கப் படுமாயின் அவ்வரசன் உயிர் வாங்கப்படலே நன்று' என்று எண்ணி அவ்வரசனை அணுகிக் கேட்டனராம். அதற்கு அவ்வரசன் மக்களை நோக்கி, 'மக்களே. அத்திமிங்கல மீனை நீங்கள் கொல்வதற்குப் போடும் தூண்டிலில் நானே இறையாக விருக்க விரும்புகின்றேன். ஆனால் நான் சில பொருள்களைக் கேட்பேன். அவற்றை நீங்கள் கொண்டுவர வேண்டும் என்றானாம். மக்களும் அப்படியே என்றனராம்'

"தன் மலத்தைத் தானே தின்கின்ற பற்றியையும். பாம்புப் புற்றில் விளைவித்த கரும்பின் சாற்றையும் நீங்கள் கொண்டுவர முடியுமானால், நான் என் உயிரைக் கொடுக்க விரும்புகின்றேன்" என்றானாம்.

தன் மலத்தைத் தானே உண்கின்ற பன்றியை அவர் எங்குப்போய்த் தேடினும் காணமுடியவில்லை. பாம்புப் புற்றில் கரும்பு விளைவிக்கும் ஒருவனையும் அவர்தம்மாற் பார்க்க முடியவில்லை. நெடுநாட்கள் இவ்வாறுகழித்து மீண்டும் அவர் அரசனை அடைந்து அவர் சொன்ன பொருள்களைப் பெற முடியாமையைக் கூறினர்.

அதற்கு அரசன் கீழ்க்கண்டவாறு கூறினானாம். "மக்களே! பிறர் மலத்தை உண்கின்ற பன்றிக்குட்டி தன்மலத்தைத் தான் மலம் என்று எண்ணி வெறுத்தொதுக்குகின்றது. அதுபோல பிறர்க்குச் செய்கையில் துன்பத்தைப்பற்றி யாரும் எண்ணுவதில்லை. தனக்குச் செய்யப்படும்போதுதான் துன்பம் எத்

தகையது என்று ஒவ்வொருவனும் எண்ணுகின்றான். தூண்டிலில் மாட்டப்படும் வாயில்லாப் புழுவின் துடிப்பை மாந்தர் அறிந்தாலும் கவலைப்படுவதில்லை. அதே தூண்டிலில் தான் மாட்டிக்கொள்ள வேண்டும்பொழுது மாந்தன் தனக்கு வரும் துன்பத்தை மிகவும் நினைக்கின்றான்.

அடுத்து, பாம்புப்புற்றில் யாரும் போய்க் கரும்பை விளைவியார். தீமையிருக்குமிடங்களில் நன்மைக்கென யாரும்போக விரும்பார். அவ்வாறு நன்மையை நாடிப்போவோர் அங்குள்ள தீமைக்கு அஞ்சி விலகுவார். ஆனால் நீங்கள் கடலாட்சி செய்யும் திமிங்கல மீனைப்பிடிப்பானேன். அது மீன் பிடிக்கப் போவோரைத் துன்புறுத்துவதனால் என்பீர். நீங்கள் கடலுக்கு மீன் பிடிக்கப் போவானேன்? நம் நாட்டிலுள்ள எல்லா நிலங்களையும் நீங்கள் ஆள்கின்றீர். அவற்றை வெட்டிப், பள்ளத்தை மேடாக்கி மேட்டைப் பள்ளமாக்கி உழுது பதப்படுத்தி வித்துக்கள் ஊன்றி விளைவிக்க எல்லோரும் முற்பட்டால் கடலில் பிறந்து உயிர் வாழும் மீனினங்கள் உங்கட்கு என்? உங்கள் நிலச் செல்வங்களைத திமிங்கலங்கள் கவர வருகின்றனவா? இல்லையே! உங்களுக்கான சொத்துக்களை விட்டு விட்டு இன்னொருவர்க்கு உரியதான செல்வங்களை நீங்கள் கவர முற்படுகின்றீர். உங்கள் வீட்டைத் திறந்து போட்டுவிட்டு, இன்னொருவர் வீட்டைக் கொள்ளையிடப் போகின்றீர். இதை நீங்கள் உணர வேண்டும்' என்றாராம் அரசர்.

மக்கள் எல்லோரும் அன்றிலிருந்து மீன் பிடிப்பையே மறந்தனர். அதனால் திமிங்கல வேட்டை வேண்டாத தாயிற்று. தூண்டிலில் மாட்டப்படும் புழுக்களுக்கும் வாழ்வு கிடைத்தது. மக்களும் நிலங்களை உழுது பயிராக்கினர், விளைவுமிகுந்தது. வறுமை மாய்ந்தது."

இந்தக் கதையை என்தாய் என் மூன்றுநாள் அகவையில் எனக்குச் சொன்னார்.

அப்பொழுது தூண்டிலைப்பற்றி நான் அறியாத நிலையில் இருந்தேன். நேற்று நான் அலைகளில் மிதந்து ஆடிப்பாடிக் களித்திருந்த பொழுதில் ஒருவன் என் வாலைப்பிடித்து இழுத்துத் தூக்கிக்கொண்டு போனான். இரவு முழுவதும் அவன் வீட்டில் இருந்தேன். இன்று எனக்கு எட்டுநாள் அகவை. இதோ, அவன் என்னை எடுத்துத் தூணியில் போட்டுக்கொண்டு, தூண்டிலுங் கையுமாகக் கடலை நோக்கிப் போகின்றான்.

அலைகள் மாந்தரை, வாரி விழுங்குவனபோல் எழுகின்றன. மாந்தரில் நல்லவரும் இருப்பதால் அவை மீண்டும் அஞ்சியொடுங்கி வீழ்கின்றன. ஒரு அலையாவது இதோ, என்னைப் பற்றிக்கொண்டு செல்லும் இச்செம்படவனை விழுங்கவில்லையே!

என்னை வெளியே இழுக்கின்றான்...... அவன் வலிந்த முரட்டு விரல்கள் பட்டு எனக்கு மயக்கம் வருவது போலிருக்கின்றது. அவன் இடது கையில்...... ஆ... ஆ... என் உடலில் தூண்டிலின் முள்போல் இருக்கின்றது......... ஐயோ, அம்மா...... எனக்கு மிகுவாக வலிக்கின்றதே! ...... ஐயோ ... அம்மா...... நீ என் தங்கையை கரைக்கு அனுப்பாதே......! கரைக்கு அனுப்பாதே! ...... நான் கதறுவது என் செவிகளுக்கே எட்டவில்லை...... அலையின் ஒலம். சாவின் இரைச்சல்......களுக்.........

நான் வீசி எறியப்பட்டேன்.

வருந்துகின்ற உடலுக்கும், துடிக்கின்ற உள்ளத்திற்கும் நீரின் குளிர்மை சிறிது ஆறுதலாய் இருந்தது...... அசைந்து அசைந்து......... இடப்புறமும்......... வலப்புறமும் துடித்துக் கொண்டிருக்கின்றேன்...... ஐயோ...... ...மேலிருந்து தூண்டிலைவேறு சுண்டியிழுக்கின்றான் போலிருக்கின்றது...... நான் கடல் நீரில் ஆறு அடிக்குக் கீழிருக்கின்றேன்...... கடலின் ஒலம் எனக்குக் கேட்கவில்லை...... அமைதி...... அமைதி...... ஒரே சாக்காட்டு...... அமைதி......

என்னை நோக்கி ஒரு மீன்......

"அட! மீனே...... வேண்டாம்; வேண்டாம் என்னைத் தீண்டாதே...... நான் தனித்திருக்கின்ற புழுவல்ல....... உயிரை விழுங்கவந்த கூற்றம்...... என் உடலின் கொழுப்பு...... உன் உயிரைக் குடிக்கும் நஞ்சு...... வேண்டாம்... வேண்டாம்... வராதே... வராதே... மீனே... என்னை விழுங்க வேண்டாம்... என் அருகில் வராதே... நான்...நான்... அடப் பேதையே!...... என்னை விழுங்கி......" என் ஒலம் அதன் செவிகளில் பட்டிருக்க முடியாது...... பட்டிருந்தால் அது என்னை விழுங்கியிராது...... அதன் மெல்லிய பேச்சு... ஏதோ பேசுவது என் காதுகளில் படுகின்றது... ஆ... நான் குலத்தைக்கெடுக்க வந்தேனும்... நீரில் பிறந்து நீரில் வாழும் உயிரையே கொல்ல, வன்மையுள்ளம் கொண்ட மாந்தனுக்கு உதவியாக விருக்கின்றேனும். ஐயோ... நான் குலங்கொல்லி... நான்... நான்... உயிர்... உயிர் ... இல்லை... இ...ல்...லே!

● ●

பல்லவர்கோன் நந்திவர்மன்

—[தண்டை. ந. ஐயாசாமி]—

முன்னுரை :-

இவ்வுலகு வாழ் மக்கள் எல்லாம் "மன்னன் எவ்வழி அவ்வழி" இயங்குவர். "இதனை நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்" என்கின்ற அடிகளாலுமறிகின்றோம்.

மன்னன் வாழ்க்கையைப் பொறுத்தே மாநிலம் அமையும் மன்னவன் சிறந்துழி மக்களும் சிறப்பர்; மன்னவன் இழிந்துழி மக்களும் இழிவர். படிவம் வடிப்பான் தொழில் நுணுக்கத்தைப் பொறுத்தேயன்றோ படிவமும் அமையும் !

நந்தமிழ் நாட்டையாண்ட மன்னர் தம்மில் பலர் பெருமறவராகவும், அறிஞராகவும் இருந்தனர். சிலரே மாறுபட்டு இருந்தனர்.

பண்டை இலக்கியங்களின் வாயிலாக அவ்வக்கால மன்னர் பற்றியறிகின்றோம். தமிழக மூவேந்தர் பற்றி நாம் மிகுதியாக அறிவோமாயினும், பிற்காலத்து வந்த பல்லவ மன்னர் தம்மைப் பற்றியும், அவர்தம் ஆட்சி முறையைப்பற்றியும் நாம் விளங்க அறிதற்கில்லை.

பல்லவர் எங்கிருந்தனர்; எப்படி வந்தனர்; இவையெல்லாம் இன்னும் விளங்குமாறில்லை. இதுபற்றி ஆராய்ந்தவரும் துணிந்து முடிபு கூறிற்றிலர்.

ஆனல், பல்லவ மன்னருள் சிறந்தவனும், பெயர்பெற்றவனுமாகிய நந்திவர்மனைப்பற்றி "நந்திக்கலம்பக"த்தின் வாயிலாக யான் அறிந்தவற்றைக் கூறவிரும்புகிறேன்.

நந்திவர்மன் காலமும் தலைநகரமும் :-

நந்திவர்மன் தந்திவர்மன் என்ற பல்லவனுடைய மகன். நந்திவர்மன் கி. பி. 825 முதல் கி. பி. 850வரை அரசாண்டவன் என வரலாறு கூறும்.

இவன் காஞ்சிமாநகரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். இவன் மகாபலிபுரத்தைத் துறைமுகமாகப் பெற்றிருந்தான். மாகாபலிபுரம் துறைமுகப்பட்டினமாகையால், கடற்படை தங்குதற்கு ஏற்றதாயிருந்தது. இவன் கப்பற்படை வைத்திருந்த செய்தி

"ஆள்குலாம் கடற்படை அவனி நாரணன்"

என்கின்ற அடிகளால் வெளிப்படுகின்றது.

இவன் தொண்டைமண்டலம் முழுவதையுந் தன் கைப்படுத்தியிருந்தான். தொண்டைநாட்டுடன் ஒட்டியிருந்த மயிலைக்கு இவன் வந்துபோய்க்கொண்டிருந்தான். இந்த உண்மை,

"மல்லை வேந்தன்; மயிலைக்காவலன்",
"பெடையேறு நெடுங்கழி சூழ்மயிலைப்
பெருமானது பேரருணீன் முடிமேல்"

என்கின்ற அடிகளால் விளங்கும். மயிலைச் சிவனை வணங்கவே இவன் மயிலைக்கு வந்தான். மேலும் இவ்வடிகளால் வெளிப்படுமுண்மை, மயிலையைச்சுற்றி உப்பங்கழிகள் அன்று இருந்தமையாகும்.

நந்திவர்மனின் சமயம் .—

நந்திவர்மனும் பல்லவன் எந்த மதத்தினன் என்பதை மிக எளிதாக நந்திக் கலம்பகத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

பெரும்பாலான பல்லவமன்னர் திருமால் சமயத்தவராயினும், நந்திவர்மன் சைவசமயத்தைப் பின்பற்றியிருக்கின்றான்.

சிவனை எப்போதும் மனத்தில் இருத்தி வழிபட்டவன் இவன். அஃதோடன்றி முன்னர்க்கண்டபடி மயிலைவாழ் சிவனை அடிக்கடி வணங்கிச்சென்றமையும் இவன் சிறந்த சிவனடியான் என்பதை விளக்குகின்றது. சிவனடியார்க்குத் தொண்டனுயும் இவன் இருந்தான்.

"பிறைதவழ் செஞ்சடைப்
பெம்மான் ஆரணம்
அறைகழல் முடித்தவன்"

என்கின்ற அடிகளினுலும்,

"சிவனை நொடியும்
மறவாத சிந்தையன்",

என வருகின்ற அடிகளினாலும், சிவவிருப்பினனாய் இவன் இருந்தமை விளங்குகின்றது.

"கழற்சிங்க நாயனார்" எனப்படுபவனும் நந்திவர்மனே யன்றி வேறு யாருமல்லன்.

இவனைப் பாடிய புலவரும் சிவன் மாட்டு நீங்காத அன்புடையவராய் இருந்திருப்பது விளங்குகிறது. சிவபெருமான் நந்திவர்மனுக்குக் குன்றா அருள் அளிக்கவேண்டும் என்று வேண்டி அந்தப் புலவர், சிவனை வழிபட்டார் என்பதும் விளங்குகின்றது.

நந்தியாண்ட நாடுகள்:

"மல்லை வேந்தன்; மயிலைக்காவலன்"
"மல்லையங் கானல் முதல்வன்"

என்கின்ற அடிகளால் இவன் மகாபலிபுரத்தையும், மயிலையையும் ஆண்ட செய்தி தெரிகின்றது.

"வடவேங்கட நாடுடை
மன்னர் பிரான்"

என்று வருகின்ற அடிகளால் இவன் காலத்தில் இவன் கைக்கீழ் திருவேங்கடமலையும் இருந்ததுதோன்றுகின்றது.

"காவிரி நன்நாடன்"

என்பதால் சோணாடும் இவனிடத்தே இருந்தது. மேலும்,

"குமரிக் கொண்கன் கங்கைமணாளன்"
"குடக்குடை வேந்தன்
தென்னாடுடை மன்னன்
குணக்கினொடு வடக்குடையான்
நந்திமான்"

எனவரும் அடிகளால் குமரிமுனையும், வடக்கே கங்கை ஆறும் இவனால் கொள்ளப்பட்டன என்பதை அறிதற்கிடனாகின்றது.

இம்மட்டோ!

"படிமிசை நிகழ்ந்த தொல்லைப்
பல்லவர் குலத்து வந்தார்" (பெரியபுராணம்)

நந்திவர்மன்,

"கழற்பெருஞ் சிங்கர் தாமும்" (பெரியபுராணம்)

ஆகிய நந்திவர்மன்,

"கூடலர் முனைகள் சாய
வடபுலங் கவர்ந்து கொண்டு" (பெரியபுராணம்)

வந்தார் என்று தெரிகின்றது.

நந்திக்கலம்பகச் செய்யுளடிகளுக்கும், பெரியபுராணச் செய்யுளடிகளுக்கும் நிறைந்த ஒற்றுமை இருக்கின்றது. இதனால், நந்திக்கு வடக்கிலும் ஆட்சி இருந்தது என்பது விளங்காநிற்கும்.

நந்திவர்மனின் போர்ச் செயல்கள்:

நந்திவர்மன் வடபுலத்தில் பலதிறப்பட்ட போர்செய்து வாகை சூடினான்; தென்புலத்திலும் பல போர்களில் இவன் ஈடுபட்டான். வாகை சூடினன் என்பதைக் கீழ்க்காண்போம்.

தெள்ளாறு:

பாண்டியன் மாறனையெதிர்த்துத் தென்புலத்தில் நந்திவர்மன் செய்தபோர் **தெள்ளாறு** என்னுமிடத்தில் நிகழ்ந்தது. நந்திவர்மன் செய்த போர்கள் பலவற்றுள் இந்தப் போர்நிகழ்ச்சியே பலபடப் பேசப்படுகின்றது.

"அமரில் தெள்ளாறு" (22)

**"கூடலர்க்குத் தெள்ளாற்றில்
விண்ணருளிச் செய்த நந்தி"**

"தெள்ளாறு எறிந்த நந்தி"

என்கின்ற அடிகள் மேற்கூறிய தெள்ளாற்றுப் போரினைக் கூறுகின்றன.

பழையாறு:

**"படையாறு சாயப்
பழையாறு வென்றான்"**

எனவருகின்ற கலம்பகச் செய்யுளடிகளால் இவன் பழையாறு என்னுமிடத்தில் நிகழ்ந்த போரிலும் வாகையே சூடினன் என்பது பெறப்படுகின்றது.

வெள்ளாறு:

"மாவெள்ளாற்று மேவலர் கடந்த" (17)
"விரவாத மன்னரெல்லாம்
விண்ணேற வெள்ளாற்று
வெகுண்டோன்"

என்கின்ற அடிகளால் இவன் வெள்ளாறு என்னும் இடத்தில் செய்த போர்பற்றியும் அறிகின்றோம்.

வெறியலூர்:

"வெறியலூர்ச் செருவென்றோன்" (20)

என்னுமடி இவன் வெறியலூர் என்னுமிடத்தும் போர் செய்து வெற்றியே பெற்றான் என்பதைக் கூறுகின்றது.

கடம்பூர் என்கின்ற இடத்திலும் இவன் போர் செய்து வெற்றிபெற்றான் என்றும் நாம் அறிகின்றோம்.

எது எவ்வாராயினும் நந்திவர்மன் சிறந்த படைமறவன். போர்களிலெல்லாம் வெற்றிமாலை சிறக்கச் சூடியவன். சேர, சோழ, பாண்டியரும், வடபுலத்து வேந்தரும் இவனுக்குத் திறை செலுத்தினர். இச்செய்தியை,

"சேர சோழரும் தென்னரும்
வடபுலத் தரசருந் திறைதந்த" (20)

என்கின்ற அடியின் வாயிலாக அறிகின்றோம்.

குருக்கோட்டை என்கின்ற இடத்திலும் இவன் போர் செய்தான்; வெற்றிபெற்றான் என்பதை

"குருக்கோட்டை காய்ந்தவேலான்" (26)

என்னும் அடியினால் தெரிந்துகொள்கின்றோம்.

இந்தக் குருக்கோட்டை என்னும் ஊர், "பெல்லாரிக் கோட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் உள்ள **குருகோடு** என்பதே ஆகும். அங்குள்ள மலைமீது அழகிய கோட்டையும், சாளுக்கியர் காலத்துக் கோவில்களும் பிறவும் அழிந்த நிலையில் இருக்கக் காணலாம்." (**பல்லவர் வரலாறு**, டாக்டர். மா. இராசமாணிக்கனார் எம். ஓ. எல். பக்கம் 183). இந்தச் செய்தி குருக்கோட்டைப்போர் உண்மை என்றே கூறுகின்றது.

மாமல்லபுரம் என்னும் கடற்கரைப் பட்டினமல்லாமல், தென்னவனுக்கு உரியதாக இருந்த சிறந்த துறைமுகமாம் தொண்டியையுங் கைப்பற்றி வைத்திருந்தான் என்கின்ற உண்மையை

"தென்னன் றொண்டி
நகரங்கை படுத்தபிரான்" (15)

என்னும் வரியால் அறிகின்றோம்!

நந்தியின் மறம்:

நந்தி பல போர்களில் வாகைசூடினன் என்பதால் இவன் பெருமறவன் என்று அறிகின்றோம். இவனைப் போல இவனுடைய யானை "**அயிராவத**"மும் மறமுடையதே! பகைவர் நந்தியால் கொல்லப்படுகின்றவரையில் அயிராவதம் விட்டு வைக்காது. இந்தச் செய்தி,

**"நந்தியெங்கோன் அயிராவதத்தில்
படுதிர் கொல்லோ"** (12)

என்பதால் விளங்குகின்றது.

நந்திவர்மனின் பண்புச் சிறப்புக்கள்:

"**காடவர்க்கு முன்தோன்றல்**" நம்முடைய நந்திவர்மன் இவன் சிறந்த தமிழ்ப்பற்றுடையவன். "**பைந்தமிழை ஆய்கின்றகோன் நந்தி**" என்கின்ற அடி இதனைக் கூறுகின்றது. இவன் தமிழிலிருக்கின்ற நூல்களின் அளவையெல்லாம் அளந்தவனாகக் காணப்படுகின்றான்.

**"தொல்லை நூல்வரம்பு முழுதுகண்டான் நந்தி"
நூல்களாற் புலவோர் நுவல்நந்தி"**

எனவரும் அடிகள் அவன் நூலறிவை உணர்த்தும் பெற்றியே பெற்றி!

தமிழ் மொழியிலேயும், தமிழ்நூற் கடலிலேயும் திளைத்துக் கொண்டிருந்த நந்திவர்மன் இசைக்கலையிலும் பயிற்சியுற்றிருந்தான் என்பதை "**ஈட்டு புகழ்நந்தி பாண**" என வருகின்ற அடி கூறுகின்றது.

நந்திவர்மன் சிறந்த வள்ளல். "**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதிய மில்லை உயிர்க்கு**" என்பதை நந்தி அறிவான். இதையறிந்த நந்திவர்மன்,

"ஏழையின் துணை நந்தி வாழி" (16)

என்று புலவர் போற்றுமாறு நடந்துகொண்டான்.

"மண்ணெலாம் உய்ய
மழைபோல் வழங்குகைத்
தண்ணுலாம் மாலைத்
தமிழ் நந்தி" (53)

என்றுஞ் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றான்.

"உரைவரம் பிகந்த உயர்புகழ்ப் பல்லவன்" புலவர் தம்மையும் ஆதரித்தான். இவன் இறந்தமைகுறித்து நந்திக் கலம்பக ஆசிரியர் எழுதியுள்ள பாடல் ஒன்றே இவன் பெருமைக்குப் போதுமானது.

"யானும் என்கவியும்
எவ்விடம் புகுவோம்;
எந்தையே நந்திநா
யகமே! (57)

இத்தகைய சிறப்பியல்புகள் கொண்ட பல்லவன் நந்தி வர்மனைப் **"பல்லவர்குலத் தோன்றல்"** என்று கூறுவதில் பெருமைப்படுவோமாக! ✻ ✻

திருத்தம்.

எட்டாம் இசை 24-ஆம் பக்கத்தில் உள்ள பாடற்பகுதியில் இரண்டாம் பாட்டு தனிச்சீர் **'காரில்'** என்றிருப்பதைக் **'காரில்லா'** என்றும், இறுதிப் பாட்டின் இறுதி ஈரடிகளை,

புகழுக் கரசி! புலவர்நாச் செல்வீ!
புகழுக் கரணும் புடைத்து!

—என்றும் திருத்திப் படிக்க வேண்டுகின்றோம். பிழைக்கு வருந்துகின்றோம். — (ஆ. ர்.)

LOVE'S PHILOSOPHY

[By Shelly]

The foutains mingle with the river;
And the rivers with the Ocean;
The winds of Heaven mix for ever
With a sweet emotion;
Nothing in the world is single;
All things by a love divine
In one spirit meet and mingle.
Why not I with thine?

See, the mountains kiss high heaven;
And the waves clasp one another;
No sister-flower would be forgiven
If it disdained its brother,
And the sunlight clasps the earth
And the moonbeams kiss the sea:
What is all this sweet work worth
If thou kiss not me?

காதல் விளக்கம்.

தண்சுனைகள் ஆற்றினிலே கலந்து பாயும்;
தடங்கடலிற் போய்க்கலக்கும் ஆற்று வெள்ளம்.
விண்வெளியில் திரிகின்ற தென்றல் வந்து
வெய்தினிய நெஞ்சுணர்வில் கலந்து நிற்கும்.
மண்ணுலகில் எப்பொருளும் தனித்தல் இல்லை;
மன்னியற்கைப் பெருநெறியால் உயிரனைத்தும்
உண்ணெகிழ்ந்தே ஒன்றோடொன் றிணையும் போதில்
உன்னுடனே நானிணையத் தடையேன் சொல்வாய்?

அகல்விசும்பை மாமலைகள் தழுவல் காணாய்,
அலைகளெலாம் பிணைந்தின்பம் நுகர்தல் காணாய்
உகுநறவ மலர்கள்தமை வண்டின் கூட்டம்
உவகையொடு வந்துவந்து மருவல் பாராய்;
பகலவன்தான் நிலமகளை அணைதல் உண்டே!
பனிக்கடலை முத்தமிடும் நிலவு வெள்ளம்!
நிகழுமிவை செய்கின்ற பயன்தான் என்னே?
நீ முத்தம் ஈந்தென்னை நெருங்கா விட்டால்!

தமிழில்: ம. இலெ. தங்கப்பா. பி. ஏ., பி. டி.

குரலினிமை.

குரலினிமைக்குத் தேவையான அமைப்புக்கள் இரண்டு. ஒன்று இயற்கைக் குரல் அமைப்பு.

தொண்டைவழியை சதைச்சுருள்கள் அடைக்காமல் இருத்தல் வேண்டும். குரல்வளை பெரிதாக இருந்தால்தான் இசை நாடிகள் வேண்டிய அளவு விரியவும் சுருங்கவும் முடியும். அப்பொழுதுதான் அதனின்று தெளிவான இசை எழும்பும். அகன்ற மார்பு வேண்டும். அவ்வாறிருப்பதால் நிறையக் காற்று உட்சென்று வெளிவர இயலும்.

இரண்டாவதாக இவற்றைப் போதுமான அளவு வளர்த்துக்கொள்ள உணவுமுறைகளில் நாட்டமும் வேண்டும்.

கெட்டுப்போன உணவின் நஞ்சு, குடிவகைகள், புகைவகைகள் இவற்றால் குரல் இனிமை கெடும். வெயிலும், குளிர் காற்றும் உடலிற்பட குரல் கெடும். இடவகமும் (கிராம்பு) கருவாப்பட்டையும் (இலவங்கமும்) குரலை இனிமையாக்கும்.

தேன் குரலை மென்மையாக்கும்.

புதினாக்கீரை, சூடான பால், வெந்த வெங்காயம், முளைக்கீரை, பொன்னாங்காணிக்கீரை, முட்டைக்கோசு இவை குரலை ஒழுங்காக்கி கரகரப்பை நீக்கும். இளநீர்வழுக்கை, மாம்பழம், வெள்ளாட்டுப்பால், வாதுமைப்பருப்பு முதலியவை குரலை எளிமையாக்கும்.

கோடிமுந்திரிப் பழத்தின் பயன்கள்.

அ) குருதி, எலும்பு, தசை இவை வன்மையுறுவதற்கான உப்புச் சத்துக்கள், இதில் மிகுந்த அளவில் இருக்கின்றன.

ஆ) கொடிமுந்திரிச்சாறு செரியாமையைப் போக்கும். உண்ட உணவை எளிதில் செரிக்கச்செய்யும்.

இ) இதில் கொழுப்புச்சத்து இல்லாமல் இருப்பதால் நோய்க்குக் காரணமான, நச்சுப் பொருள்களைச் சேராமல் காக்கின்றது.

ஈ) வயிற்று வீக்கம், நெஞ்சுநோய், காற்றுப்பெருக்கம் இவற்றைப் போக்கும்.

உ) மலச்சிக்கலை அறவே அகற்றும்.

ஊ) இதன் சாறு வாய்ப்புண்ணையும், குடர்ப்புண்ணையும் விரைவில் ஆற்றும்.

○ ○

அவள் யாரோ?

எனக்கென்றே இம்மண்ணில் பிறந்து வாழ்வாள்,
எவ்வூரில் இருப்பாளோ? பெயர்தான் யாதோ?
தனக்கென்றோர் குறிக்கோளும் என்னைப் போன்றே
தமிழ்ப்பற்றும் மிக்கவளோ? அறிவில், அன்பில்
மணக்கின்ற தமிழ்ப்பெண்ணோ? மறம், நாண், பண்பு
குறையாமல் உடையவளோ? கலைகள் யாவும்
கணக்கின்றிக்கற்றவளோ? கண்ணால் காதல்
கதைபேச வல்லாளோ? அவள்தான் யாரோ?

கடைந்தெடுத்த நன் மருப்பின் உருவோ? கண்ணைக்
கயலென்று சொல்வாரே யதுவோ? வேலோ?
உடைந்திட்ட கண்ணாடிச்சிதறல் போன்றே
உதிர்ப்பவளோ புன்னகையை? அவளை யானும்
அடைந்திட்டால் தமிழைப்போல் இன்பந்தன்னை
அளிப்பதற்குத் தெரிந்தவளோ? வாயி லண்டைப்
படர்ந்திட்டக் கொடிமுல்லை மணத்தைப் போன்று
பலர்போற்ற நடப்பவளோ? அவள்தான் யாரோ?

இடையவளுக் கொருவேளை யுண்டோ? அன்னாள்
எழில்வடியும் வட்டமுகம் நிலவோ? நீண்டு
நடைதடுக்கும் கருங்குழலில் புருவ வில்லில்,
நற்கருமை நிறமும் வாள் நுதலிற் பொட்டும்
உடைமூடி மறைத்தாலும் இளமை பொங்கும்
உடற்கட்டும் நல்லழகும் உண்டோ? அன்னாள்
கடைவிழியும். என்விழியும் ஒன்றை யொன்று
காண்பதென்றோ? உவப்பதென்றோ? அவள்தான் யாரோ?

குறும்பாகச் சிரிப்பவளோ? சிரிக்கும் போழ்தில்
குழிவிழுமோ கன்னங்கள்? அன்பே என்றால்
கரும்பாக இனித்திடுமோ? மீட்டும் யாழ்போல்
காதினிக்க இசைதருமோ அவள்வாய்? முல்லை
அரும்பொக்கும் பல்வரிசை முத்தைப் போலே
அழகாக ஒளிவிடுமோ? நாணத் தாலே
திரும்பாமல் திரும்புவளோ? என்னைக் காணின்
தெரிவையவள், பளிங்குமுகம்? பொத்து வாளோ?

ஆடலிலே சிறந்தவளோ? அன்னம் போன்றே
அழகுநடை பயில்பவளோ? தமிழ்ப்பண் கூட்டிப்
பாடலிலே நிகரில்லாள் தானோ? வாழ்க்கைப்
பாதையிலே குறள்கண்ட பெண்ணைப் போலே
ஊடலிலும் கூடலிலும் மாறி மாறி
உயரின்பம் அளிப்பவளோ? புகழை என்போல்
தேடலிலே மிகுவாக நாட்டம் கொண்டே
தேன்மொழியாள் இருப்பாளோ? அவள்தான் யாரோ?

கண்ணகியைப் போன்றவளோ? அன்றி யொருகால்
கலைச்செல்வி மாதவியோ? இல்லை யென்றால்
பெண்ணரசி மேகலை போன் றவளோ? அன்றேல்
பின் யார்ப்போல் இருப்பாளோ? குறளைத் தந்து
மண்ணகத்தில் புகழ்பெற்ற, வள்ளு வன்றன்
மனையாட்டி போல்வாளோ? நிலவைப் போன்று
தண்ணொளியைச் சேர்த்தின்பம் அளிக்கப் போகும்
தமிழ்நங்கை என்மனைவி என்பாள் யாரோ?

குறள்கற்றுத் தெளிந்தவளோ? தமிழில் உள்ள
குறைவில்லா இலக்கியங்கள் அனைத்தும் ஆயும்
திறன்பெற்றே இருப்பவளோ? மேடை யேறித்
தெளிவாகப் பலர்முன்னே பேசு கின்ற
உரன்முற்றும் உடையவளோ? தேன்போல் நல்ல
உயர் பாடல் யாப்பாளோ? பண்டைப்பெண்டிர்
விறல் பெற்றே எழுந்திந்த நாட்டைக் காக்கும்
வெம்போரை நடத்துவிக்க வல்லாள் தாமோ?

நான்அவளை நினைப்பதைப்போல் அவளும் என்னை
நாள்தோறும் நினைப்பாளோ? அவளைப் பற்றி
ஏனெனக்கே அதற்குள் இவ் வெண்ணம்? அந்த
இளங்கொடியாள் யாராய்த்தான் இருப்பாள்? நான்அத்
தேன்வடியும் முகநிலவை என்றைக் குத்தான்
தெரிந்துகொள்வேன்? உள்ளம் களிப்பேன்? என்போல்
தான் கனவில் கற்பனையில் மூழ்கி என்றுந்
தவிப்பாளோ? அவள்யாரோ? எங்குள் ளாளோ?

—[நயனூர்மண்டபம், இரா. அரங்கநாதன்]—

மாமைக் கவினே!

[வே. நடராஜர் நம்பி]

கருத்தினைக் கவர்ந்து, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அளவுக்குக் கற்பனை அழகு மிளிர, உண்மை உணர்ச்சிகட்கு 'உரு'க்கொடுத்துப் பாடலியற்றுவதிலே — நம் தண்டமிழ்ப் புலவர் தன்னிகரில்லாதவர்.

இத்தகைத்திறனும், ஈடிலாப் புகழுங்கொண்ட—நம் பண்டைச் சான்றோர் நில இயலமைப்பை ஐவகையாகப் பகுத்து, ஒவ்வொன்றின் இயல்பு, அவ்விடத்தே வாழும் மக்களின் உளப்பண்பாட்டியல், அவர்தம் வாழ்வியல் முறைமை ஆகியவைபற்றி மிகத் தெள்ளிய முறையிலே விளக்கிப் பற்பல பாக்களை யாத்துள்ளனர்.

அவற்றில் பாலைநிலப் பெண்ணொருத்தி கூறுவதாக அமைந்த ஒரு பாடலைக் காணுவோம்.

ஈடிணையற்ற அழகுடைய பருவப்பெண்ணொருத்தி கூறுவதாக அமைந்தது அப்பாடல்!

மணமாகாதிருந்த அழகி அவள்! தன் தோழியர் பலரை மணமுடிந்த நிலையிலே—காணுந்தோறும், காணுந்தோறும், "கடலிற் பெய்த மழைபோலவும், பாலைநிலத்திற் காய்ந்த நிலவைப்போலவும்" — தன் பருவம் வீணாகிக்கொண்டு வருகிறதே என, வருத்தம் அவள் உளத்தை நெருக்கும். ஆனால் வெளியிலும் சொல்ல இயலாத நிலையில் வெட்கம் திரைபோட்டுவிடும். இவ்வண்ணமே நாட்கள் பல நகர்ந்துசென்றன.

ஒருநாள்—மாலைவேளையில் தன்தோழி ஒருத்தியுடன் வீட்டிற் கருகிலுள்ள பசும்புற்காட்டுக்கு உலவச்சென்றாள். பலவற்றைப்பற்றியும் இருவரும் உரையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது நல்ல வளமையான உடலைக்கொண்ட ஓர் ஆ வயிறாறப் புல்மேய்ந்து, வீடுதிரும்பி வருவதை இருவருங் கண்டனர்.

வந்துகொண்டிருந்த ஆ தன் இளங் கன்றிற்காக அங்குமிங்கும் பார்த்தது. ஆனால், அதற்குச் சுற்றுப்பக்கம் எங்கும் தன் கன்று தென்படவில்லை. அக்காலை — இளங்கன்றை

நினைத்துத் தேடிய ஆவின் மடிக்காம்பிலிருந்து — தானாகவே பால் வழிந்தது. அங்ஙனம் வழிந்த பால் நிலத்திலே ஓடியது! இந்நிகழ்ச்சியைக்கண்ணுற்ற தோழி, அழகியைவிளித்துக் காட்டுகிறாள்:

"அடடா"! கன்றும் குடிக்கவில்லை, கலத்திலுங்கூட கொள்ளவில்லையே! வீணாகவன்றோ பால் ஒடுகிறது" — என்று இரக்க உணர்ச்சியால் உந்தப்பட்ட தோழி இயம்புகிறாள்.

உடனே அழகி:-

"கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது" என எதோ தனக்குள் முணுமுணுக்கிறாள்.

இதற்குள்—தரையில் வழிந்து ஓடும் பாலைப்பார்த்து "எவருக்குமே பயன்படாமல் வீணாகப் பாழாகிறதே" என மீண்டும் உரத்துக் கூறுகிறாள் தோழி.

செவியுற்ற அழகி—எரிச்சலுடன், "ஆமாம் — எல்லாம் அதைப்போலத்தான்" என்கிறாள்.

"அதைப்போல....என்றால்! எதைப்போல? எனத் தோழியும்" விடாது வினவுகிறாள்.

"எனக்கும் ஆகாது, என் தலைவனுக்கும் உதவாது"— என்று அழகி பதிலிறுக்கிறாள்.

"எது"?!-என அடுத்துக் கேட்கும் தோழிக்குச் சினமும், வெட்கமும் கலந்த உணர்ச்சிதோன்ற "என் கவினே" எனக் கூறுகிறாள், தலைவி.

இப்படிக் கூறித் தன் உள்ளக்கிடக்கையை அவள் வெளியிடுவதுபோலத் தண்டமிழ்ப்புலவர் 'வெள்ளிவீதியார்' – மிக அழகாக, சுவை சொட்ட, 'காதல்' உணர்ச்சி நிரம்பிய 'உள்ளத்தை' அப்படியே ஓவியமெழுதிக் காட்டுகிறார். அப்பாடல் இது;

"கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது.
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் என்மாமைக் கவினே"

— வெள்ளிவீதியார்.

(குறுந்—உஎ)

நாடகம்

யாழ் முத்தாரம்

—: மாரி. அறவாழி :—

[❊]

[யாழும், முத்தும், ஆர (சந்தன)மும் பெண்டிர்க் கொப்பான முப்பொருள்கள். யாழிசையும், முத்து நகையும், ஆரவண்ணமும் அவரிடையே பின்னிக் கிடப்பன. இவைமட்டுமா, அவர் வாழ்க்கையே அவற்றில் பொதிந்துள்ளன. கரு, கலித்தொகை, பாலை — 9–ஆம் பாட்டில் உயிர்த்தது; உரு, மாரி–அறவாழியின் கைபட்டுத் திருவுற்றது, (ஆ.ர்.)

இடம்;— ஒரு சோலை, காலம்: இரவு,
உறுப்பினர்: தலைவி, தோழி, தலைவன்,

(தலைவியும் தோழியும் தலைவனது வருகைக்காகக் காத்திருக்கின்றனர், மழை தூறிக்கொண்டிருக்கிறது. தலைவி ஏமாற்றத்துடன் தோழியிடம் பேசுதல்.)

தலைவி: ஏடி தோழி! அவர் இன்னும் வந்தாரில்லையே! குறித்த நேரம் இதுதானே?

தோழி: (குறும்புடன்) ஆமாம்! கதிரோன் சாய்ந்து இருளும் ஒளியும் கொஞ்சிப்பிரியும் நேரத்தில்தான் உன்னையும் கொஞ்சிக் கூடுதற்கு அழைத்தார்... கெஞ்சிக்கெஞ்சி வேண்டியவர் மறந்து விட்டார்... அஞ்சியவள் போல் நடித்த நீ முன்னதாகவே வந்து காத்திருக்கின்றாய்......

தலைவி: போதும் உன் விளையாட்டு! என்மனம் படும்பாட்டை அறியாமல் மனம் போனபடியெல்லாம் பிதற்றுதே! விளையாடுதற்கு இதுவா நேரம்?...... அந்தோ! இது என்ன... கண்களை இருட்டும் காரிருள் நாற்புறமும் மண்டிவிட்டதே, பிள்ளைப் பேறுறும் பெண்ணைப் போல வானம் புரண்டு புரண்டு துடிக்கிறதே. இடியும் மின்னலும் வெட்டி முழங்குகின்றனவே. தூற்றலும் பெரிதாகிக்கொண்டிருக்கிறது. துணைக்குச் சுழற்காற்றும் சேர்ந்து கொண்டால்... ஐயையோ!... வழியில்... அவர் சிக்கிக்கொண்டால்...!

(இருவரும் அமைதியாக நிற்கின்றனர். அவர்தம் கண்கள் இருளை ஊடுருவிப் பார்த்துக்கொண்டிருக்கின்

றன. தூறிக்கொண்டிருந்த மழை சடசட வெனக் கொட்டத் துவங்கிவிட்டது. தோழி தலைவியை அழைக்கிறாள்.)

தோழி: குழலீ! பெருமழை துவங்கிவிட்டது. வா! இருவரும் ஆற்றோரத்து இலைக்குழலுக்கு ஓடிவிடுவோம்.

தலைவி: மாட்டேன்! நீ வேண்டுமானால் போ! என் "அவர்" இந்நேரம் எவ்விடத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கிறாரோ. அவர் துன்புற்றுத் துடிக்கும் வேளையில் நான் இன்புறுவதா? என்னால் வரமுடியாது ....!

தோழி: இது என்ன அறியாக் குழந்தைபோலப் பேசுகின்றாய்! காலில் முள்தைத்தது என்பதற்காகக் கையையும் வெட்டிவிட வேண்டுமா?

தலைவி: அதற்காக அவர் துன்புறும்போது நான் இன்புற முடியுமா?

தோழி: இன்புறவேண்டாம். ஆனால் வலியச்சென்று துன்பத்தில்விழ வேண்டாம் என்றுதான் கூறுகின்றேன். மழையில் நனைந்தால் உன் நலம் கெடும். நாமோ, அன்னையும் தந்தையுமறியாமல் கள்ளத்தனமாக வந்திருக்கிறோம். நல்லபடியாகப்போய்ச் சேரவேண்டாமா?

தலைவி: நீ என்ன சொன்னாலும் என் மனம் ஒவ்வாது! அவர் வரும்வரை நானும் இந்த மழையில் நனைந்துகொண்டு தான் நிற்பேன்.

தோழி: குழலீ! இது என்ன பொருளில்லாத "விடாப்பிடி"! என்னிடம் நடிப்பா காட்டுகிறாய்?

தலைவி: என்னசொன்னாய்? (சினத்துடன்) என்காதல் உனக்கு நடிப்பாகவா தோன்றுகிறது?

தோழி: ஐயமென்ன? வெறும் நடிப்புத்தான்! இல்லையென்றால் அவர் இந்நேரம் உன் பொருட்டுத் தம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காட்டிலும் மேட்டிலும், மடுவிலும், மழையிலும் துன்புறும்போது நீமட்டும் இங்குக் கற்பாவைபோல் அசையாமல் நின்றுகொண்டிருப்பாயா?

தலைவி: (பேரிடியுடன்) ஆ!

தோழி: ஏன் அஞ்சுகிறாய்? உண்மையைக் கூறிவிட்டேன் என்றா?...... உண்மை அதுதானே! அவர் கடந்து வரவேண்டியவழி எத்தகையது என்பதை நீ அறி

வாயா?... அப்பப்பா! நினைக்கவே குலை நடுங்குகிறது. காதுகளைச் செவிடாக்கும் இரைச்சலுடன் வெறி கொண்டோடும் ஆழமான காட்டாற்றையொட்டி நிற்கும் மலையுச்சிகளினிடையே தான் வழி அமைந் திருக்கின்றது! அவை எப்படியிருக்கும் தெரியுமா? வேங்கையின் கோரைப்பற்களைப்போல கூர்மையான நுனிகளையுடையனவாக இருக்கும். உயரமான அந்த ஒற்றையடித் தடத்தில், பாறைகளையும், அங்கங்கே முளைத்து அடர்ந்து கிடக்கும் பூண்டுகளின் வேர்களை யும், பிடித்துக்கொண்டே, தடைசெய்யும் மேலைக் காற்றை எதிர்த்து மெதுவாக விழிப்போடு முன்னேற வேண்டும். சிலவளைவுகளில் தவளைபோலக் குனிந்து தத்தித்தத்தி நகரவேண்டும். மற்றும் சில முட்புதர் களில், உடலெல்லாம் காயமுற நத்தைபோல ஊர்ந்து வரவேண்டும். சிறிது தவறினாலும், இருண்ட அந்தக் கானாற்றுக்கு இரையாக வேண்டியதுதான் .... இவற்றையெல்லாம் கடந்துவிட்டாலும் மாளாது மலைச்சாரலின் அடிவயிற்றில் கிடக்கும் காடுகள் இருக்கின்றனவே......... அவற்றை நீ பார்த்தால் அங்கேயே உயிரை விட்டுவிடுவாய்...... உள்ளே நுழைந்து விட்டால் வெளியே வருவதற்கு வழியே தெரியாது. செய்வதறியாது திரும்பிப்பார்க்கும் இட மெல்லாம் புதர்களும் முளைஞ்சுகளுமே நிறைந்திருக் கும்! இருள் மண்டிக்கிடக்கும் அவற்றின் வாயில் களில் தகதகவென்று தீப்பந்தங்கள், அசையாமல் அமைதியாக எரிந்துகொண்டிருக்கும்; அவை என்ன வென்று நினைக்கிறாய்? அம்மம்ம! உடல் சிலிர்க்கிறது நாள்முழுதும் இரை கிடைக்காமல் பசிவெறியோடு படுத்துக்கிடக்கும் புலியின் கண்கள்தாம் அவை! அந்த இடத்தைக் கடக்கும் ஒவ்வொரு கண்ணிமைப்பொழு தும் உயிர் நம்முடையது இல்லை என்றே தோன்றும் அதையும் கடந்து...துப்பு நிலத்தில் இறங்கவேண்டும்; அங்கு யா...ா கூட்டங் கூட்டமாகப் படுத்துப் பிளிறிக்கொண்டிருக்கும்.

செந்நாய்கள் படைபடையாகத் திரிந்துகொண்டிருக் கும். மலைப்பாம்புகள் இரைதேடப் புறப்பட்டுக் கொண்டிருக்கும். தேள்கள், எறும்புகளைப்போல ஊர்ந்துகொண்டிருக்கும்...................

(இவ்வளவையும் கேட்டதலைவிக்குக் கண்கள் இருண்டு தலைசுற்றுகிறது. தோழி அதைக் கருதா மல் மேலும் சொல்கிறாள்.)

இத்துணைத் துன்பங்களையும் கடந்துதான் உன்னை அவர் காணவந்தாக வேண்டும். நீயோ... தாள் தேயா மல் புல்மேல் நடந்து வந்துவிடுகிறாய். அவர் துன் பத்தில் நீயும் பங்குகொள்வதாகப் பிதற்றுகிறாயே அது உண்மையாயின்...இந்நேரம் நீ அவரை எதிர் நோக்கிக்கொண்டு அந்தக் கொடிய தடத்திலல்லவா ஓடிக்கொண்டிருக்கவேண்டும்.........

(அவள் பேசி முடிக்குமுன் தலைவி மயங்கிவிழுகிறாள். தோழி அவளைத் தாங்கிப்பிடித்து இலைக்குடிலுக்கு இட்டுச்சென்று புற்றரையில் கிடத்தி முகத்தில் நீர் தெளித்துக் காற்று வீசுகிறாள். தலைவி தன்னுணர் வற்ற நிலையிலேயே நெடுநேரம் கிடக்கிறாள். மீண் டும் கண்விழித்தபோது, ஓர் ஆண்மகன் மடியில் தன் உடல் கிடப்பதை உணர்கிறாள். துடித்தெழுகிறாள். அவன் வேறு யாருமல்லன்! அவளது காதலன்தான். அவள் 'ஓ'வென்றலறிக்கொண்டே குழந்தையைப் போல அவனை இறுகத் தழுவிக் கொள்கிறாள். அவன் தேற்றுகிறான்.)

தலைவன்: குழலி! நீ இவ்வளவு கோழையாக இருப்பாய் என்று கனவிலும் கருதினேனில்லை.

தலைவி: (செல்லமாகக் கடிந்தவண்ணம்) ஆமாம்! ஆமாம்! நான்கோழை! நீங்கள் பெரிய மறவர்போலும்!

தலைவன்; ஐயமென்ன! அன்று ஏறு தழுவிய என் மறங்கண்டு தானே நீ என்பால் காதல் கொண்டாய். திடீரென்று இப்போது என் மறத்தில் என்ன குறை கண்டுவிட் டாய்?

தலைவி: முரட்டுக்காளைகளையும், வெறிகொண்ட களிறுகளை யும் அடக்கினால்மட்டும் போதுமோ? தன் உயிரைக் காத்துக்கொள்ளத் தெரியாவிட்டால் அந்த மறத்தி னால் என்ன பயன்?

தலைவன்; இப்போது என் உயிருக்கு என்ன வந்துவிட்டது? உடலும் நன்றாகத்தானே இருக்கிறது. (தனது மார் பையும் தோளையும் செருக்கோடு பார்த்துக்கொள் கிறான்)

தலைவி; அது உங்கள் **உடல்** தானே!
(தலைவனுக்கு அவள் கூற்றின் பொருள் புரிகிறது. தலைவியை மகிழ்ச்சியோடு உற்றுப்பார்த்துப் புன்முறு வலிக்கிறான். பேசுகிறான்)

தலைவன்; உயிருக்குமட்டும் என்னவாம்? அழகே உருவாகக் கொழு கொழுவென்றுதானே ;என் தோளில் சாய்ந் திருக்கிறது......

தலைவி: அந்த இறுமாப்பு இருக்கட்டும்!... இந்த உயிர் உங் கள் உடலைவிட்டுப் பிரியப் போகின்றது... ஆம்! மிக விரைவில்......

தலைவன்: கனவு கண்டாயா குழலி?

தலைவி: உலக நடப்பு என்பது ஒரு கனவாக இருக்குமானால் இதுவும் ஒரு கனவுதான்.

தலைவன்; (பதட்டத்துடன்) உண்மையாகவா சொல்கிறாய் குழலீ!

தலைவி; ஆம்! நமது காதல் விரைவில்......(விம்மல்) ...விரை வில்......

தலைவன்: புரியும்படி விளங்கச்சொல்!

தலைவி; என் பெற்றோர் என் திருமணத்திற்கு உறுதியளித்து விட்டனர்.

தலைவன்; (துடிப்புடன்) என்ன?

தலைவி; ஆம்! செங்காட்டுக்குடிப் பெருவேளாளர் சாத்தை யாவின் ஒரே மகனும்! ஆயிரம் மாடுகளுக்குரியவராம் அரசவிருதுகள் பலவும் பெற்றவராம்......

தலைவன்: (சினத்துடன்) போதும் நிறுத்து! அதற்கு நீ ஒப்புதல் அளித்துவிட்டாயா?

தலைவி: (விம்மலை அடக்கிக்கொண்டு) பெற்றோர் கண்காணிப் பில் இருந்துகொண்டு அவரையே என்னால் எப்படி எதிர்க்க முடியும்? என்பால் அவர் கொண்டுள்ள உயிர்நிகர்த்த அன்பிற்கு ஊறு செய்யவும் என்மனம் இசையவில்லை... செய்வதறியாது குழம்புகின்றேன்...
(இருவரும் செயலற்றுப் பேச்சற்று, நெடுநேரம் ஊமைகளாக இருக்கின்றனர்; பின் தலைவன், தலை வியை அழைக்கிறான்)

தலைவன்; குழலீ! எனக்கொன்று தோன்றுகிறது!... ஆம் அது தான் சிறந்த வழி!

தலைவி; என்ன?

தலைவன்; அருகே வா!... என் முடிவை ஏற்றுக்கொள்! தயங்க வேண்டாம்.

தலைவி அவன் வாயருகே தன் செவிகளைக்கொண்டு செல்கிறாள். அவன் ஏதோ ஓதுகிறான். மறுவினாடி தலைவியின்முகம் சுண்டுகிறது. சிவக்கிறது. கண்களில் நீர் பெருகுகிறது முத்துக்கள் உதிர்கின்றன. தேம்புகிறாள். அவன் தேற்றுகிறான்.)

காட்சி, 2

இடம்: தலைவியின் இல்லம், **நேரம்: காலை.**

உறுப்பினர்: தலைவியின் நற்றாய். செவிலித்தாய். தோழி.

(தலைவியின் தந்தை வெளியூர் சென்றிருக்கின்றார். நற்றாய் எதையோ பறிகொடுத்தவளாய் துன்பமே உருவாக மூலையில் உட்கார்ந்திருக்கிறாள். தலைவியின் ஆடையணிகளும் அவள் வைத்து விளையாடிய பாவைகளும் பிறவும் பொலிவிழந்து சிதறிக் கிடக்கின்றன. செவிலித்தாய் துன்பம் தோய்ந்த முகத்துடன் வீடு முழுவதும் ஓடியோடி எதையோ தேடிக்கொண்டிருக்கிறாள். அவள் நடையிலும் போக்கிலும் அச்சமும் படபடப்பும் போட்டியிடுகின்றன. அப்பொழுது தலைவியின் தோழி தளர்ந்த நடையுடன் வீட்டினுள் நுழைகிறாள். நற்றாய் அவளைத் தன்னருகே அழைத்துக் கேட்கிறாள்.)

நற்றாய்; ஏனடி பிறைநுதலி! என் கண்நிகர் குழலியை வழியில் எங்காவது பார்த்தாயா? நேற்றிரவு நீ வீடு சென்றபோது அவள் இங்குதானே இருந்தாள். விடிந்து எழுந்துபார்க்கும்போது காணப்படடாளில்லை. எங்கே சென்றாள் என்று உனக்குத் தெரியுமா?

தோழி: (சற்றுத் தயக்கத்துடன்) உறுதியாக ஒன்றும் தெரியாதம்மா! ஆனால் ,...

நற்றாய்: (படபடப்புடன்) ஏனடி நிறுத்திவிட்டாய்? சொல்! என்ன "ஆனால்"

தோழி: நேற்று ஆற்றோரத்து இளமரக்காவில் அவளும் அவளது காதலனும்......... (சொற்கள் முடியவில்லை. தவறிச்சொல்லிவிட்டதற்காக நாவைக்கடித்துக்கொள்கிறாள்)

நற்றாய்: (அதிர்ச்சியடைந்து) என்ன? என்ன? என்னடி உளறுகிறாய் குழலிக்கு ஒரு காதலனா...? ...? ...?

தோழி: ஆம்! அம்மா! அவள் உளம் கவர்ந்தவன் ஒருவன் உளான்!... நம்மூர் மலையடுத்த சிற்றூரில் வாழ்பவன் அவன். நல்ல அழகன்! மறவன்... ஒருநாள் தினைப்புனத்தில் வேங்கை பொன்றின் கொடு நோக்குக்கு நாங்கள் இரையாகி...... இறப்பின் வாய்க்குள் நுழைந்துகொண்டிருந்தபோது... அவனால் காப்பாற்றப்பட்டோம். அப்போதுதான் கையிலிருந்த வேலினை களிற்றொன்றின்மேல் செலுத்தி அதனை வீழ்த்திவிட்டு வெறுங்கையினனாக வந்தான். எங்கள் நிலை கண்டான். இமைப்பொழுதும் தயங்காது வேங்கைமேற் பாய்ந்தான். வேங்கையாகப் போராடினான். அதன் உயிர் பறித்து எங்கள் உயிர் காத்தான். நான்வாய்ச் சொற்களால் நன்றி பாராட்டினேன். குழலியோ சொற்களன்றிச் செய்கைகளால் நன்றிகூறினாள்... குருதி வழிந்த அவனது பரந்த மார்பினைத் தழுவி அப்பசும்புண்களைத்தன் குளிர் உதடுகளின் ஒற்றுக்களால் ஆற்றினாள்.

வளர்பிறைபோல் வளர்ந்த அவர்தம் காதல், உங்கள் முடிவினால் மலைத்தது. பிறனொருவனுக்கு மாலையிடக் கனவிலும் இசையாத உங்கள் மகள் தன் காதலனுடன் உடன் போக்கு நடத்தி விடுவதாகப் பலநாளும் கூறிக்கொண்டிருந்தாள்... நேற்றிரவுகூடத் தன் காதலுடன் பேசிக்கொண்டிருந்தாள்.........

(இதுகால் செவிலித்தாய் அங்குவந்து சேர்கிறாள். தோழி நற்றாய் இருவரின் வாயிலாகவும் செய்தியை அறிகிறாள். கண்ணீர் வடிக்கும் நற்றாய்க்கு ஆறுதல் கூறுகின்றாள்)

செவிலி: எதற்காக நீங்கள் கண்ணீர் வடிக்கவேண்டும்? கவலையைவிடுங்கள்! கண்மணி நம்மைத்துறந்து வேறெங்கும் போயிருக்கமாட்டாள். அருகிலுள்ள ஊர்களுக்கு ஆட்களை அனுப்பித் தேடிப்பார்த்தால் அகப்படுவாள்... குழந்தையைக் கண்டுபிடித்துக்கொடுப்பது என் பொறுப்பு... இதோ நானே புறப்படுகின்றேன்.

தோழி: அம்மா! நானும் உடன் வரட்டுமா?

செவிலி: வேண்டாம்! அன்னையாருக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிரு! நான் தேடி வருகிறேன்.

(செவிலித்தாய் தலைவியைத் தேடிப் புறப்படுகின்றாள்)

காட்சி. 3

இடம்: நெடிதுயர்ந்த நீண்டமலைச் சாரல்களுக்கிடையே கிடக்கும் எல்லையற்ற மணல் வெளிப் பரப்பு. கொளுத்தும் வெயில்!

காலம்: அழலெனப்புகையும் நண்பகல்.

உறுப்பினர்: செவிலித்தாய், ஒரு வழிப்போக்கரான புலவர்,

(செவிலித்தாய் பசியாலும், வெயிலாலும், வழிநடந்த களைப்பாலும் உடல் சோர்ந்து தள்ளாடித் தள்ளாடி, கால்கள் மணலில் புதைய நடந்து கொண்டிருக்கிறாள். தன்னந்தனியளான அவள் தன் தலையில் சேலை முன்தானையை எடுத்துப் போர்த்துக் கொண்டிருக்கிறாள். சுருக்கம் விழுந்த தனது வலது கையை உயர்த்திக் கண்களுக்குமேல் வைத்துக்கொண்டு வெயிலை மறைத்து எதிரே யாராவது வருகின்றாரா எனப் பார்க்கிறாள். ஒருவரும் காணப்படவில்லை. நீண்ட நேரத்திற்குப்பின்னர்...... நெடுவழி சென்றபின் ஒரு புலவர் முதுமைப் பருவத்தினர் எதிரே வந்துகொண்டிருப்பதைக் காண்கிறாள். அவர் அருகே வந்தவுடன்... அவள் அவரை விளித்துக் கேட்கிறாள்.)

செவிலி: ஐயா! நெடுந்தொலைவிலிருந்து இதே வழியாகத்தானே நீர் வந்துகொண்டிருக்கிறீர்?

புலவர்: ஆம் தாயே! உங்களுக்கு என்னவேண்டும்?

செவிலி: வழியில் என் மகள், இளைஞன் ஒருவனுடன் நடந்து செல்வதைக் கண்டீரா?

அவர்: (சற்று ஏதோ கூர்ந்து நினைத்துப்பார்த்துப்பின்) ஆம்! ஆம்! பார்த்தேன். ஒரு அழகு நம்பியும் நங்கையும் இன்பமாகப் பேசிய நிலையில் இக் கொடுங்கோடையையும் குளிர் நிலவாகக் கருதிக்கொண்டு போவதைக் கண்டேன்!... உம்!... அப்பெண் உங்கள்மகள்தானா?

செவிலி; ஆமாம் ஐயனே! அவள் என் மகள்தான். நாங்களறியாமல் எவனோ ஒரு இளைஞனைக் காதலித்துக் களவொழுக்கம் பூண்டாள். நேற்றிரவு அவனுடன் புறப்பட்டுவிட்டாள். உண்மை இப்பொழுதுதான் தெரிந்தது. தேடிக்கொண்டு இதோ புறப்பட்டேன்.

அவர்: தாயே! தாங்கள் இவ்வாறு அவர்தம்மைத் தேடிக் கொண்டு அலைந்து தொல்லைப்படவேண்டாம். நான் ஒன்று கூறுவேன். செவிசாய்ப்பீரா?

செவிலி: கூறுங்கள்.

அவர்: மணக்கும் ஆரம் (சந்தனம்) மாமலையில் வளர்கிறது. ஆனாலும் அது அந்த மலைக்குப் பயன் தருவதில்லை. எவனோ ஒருவன் அதை அரைத்து மார்பிலே பூசிக்கொண்டானேயானால் அவனுக்கே பயன்படுகிறது. அப்போதுதான் அதுவும் தன் பிறப்பின் குறிக்கோளை எய்துகிறது. அதேபோல் கடலிலே விளைகின்ற வெண்முத்துக்களையும், யாழிலிருந்து எழுகின்ற இனிய இசையையும் பாருங்கள்: அவை தாம் பிறந்த இடங்களுக்கு எவ்விதப்பயனும் தருவதில்லை. மாறாக, முறையே கழுத்திலே விரும்பி அணிந்து கொள்கின்றவர்க்கும், யாழை மீட்டி இசை நுகர்வோர்க்குமே பயன்படுகின்றன. அவற்றினைப் போன்றதே பெண்டிரின் அழகும், இளமையும், அவர்தம் வாழ்க்கையும்!

நம்மகள் அழகும், அறிவும், அன்பும், பிற பண்புகளும் நிரம்பப்பெற்றவளாக இருக்கலாம். ஆனாலும் அவள் நம் வீட்டிலேயே வாழ்நாள் முழுதும் இருந்து விடுவாளேயானால் அவற்றால் யாதுபயன்? தகுதி வாய்ந்த இளைஞன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு இன்புற்றாலன்றோ அவளது வாழ்க்கை பயனுற்றதாகும்! அதுதானே இயற்கையுங்கூட. நீங்கள் விரும்பி மணஞ்செய்து வைக்கும் ஒருவனைவிட அவள் கருத்துக்கும் கண்ணுக்கும் இயைந்தவனையே அவள் விரும்பிப்போனது இன்னும் விரும்பப்படுவதன்றோ?

எனவே நீங்கள் கவலையுறாது திரும்பி வீடு செல்லுங்கள். உங்கள்மகள் தன் கணவனோடு வீடு திரும்பும் நல்ல நாளை எதிர்பார்த்து ஆறுதலுறுவீராக!

(வழிப்போக்கன் புகன்ற நயமான உரைகள் செவிலியின் உள்ளத்தை நெகிழ்விக்கின்றன, மகிழ்விக்கின்றன. அதனால் வந்த வழியே நடந்தாள்.)



பிரிவுத் துன்பம்

அன்புள்ள என்னத்தான்! பிரிந்து சென்றீர்!
ஆழ்ந்துள்ள பெருங்கடலின் துன்பந் தன்னில்,
முன்பறியாப் பெருங்காட்டின் நடுவில், வானை
முட்டுகின்ற மலைமீதில், தனிமைச் சேற்றில்,
என்பதனைத் துளைக்கின்ற வாடைக் காற்றில்,
இனுஞ் சொன்னல், சாவினது மடியில், வாழும்
மன்பதைக்கு வெகுதொலைவில் விட்டுச் சென்றீர்!
மறந்துவிட்டீர்! மறக்கவில்லை என்றன் நெஞ்சம்!

பொருள்தேடச் செல்கின்றீர்! ஆனல் அன்பின்
பொருளுணரா திருக்கின்றீர்! துன்பம் என்ற
இருள்வந்து போர்த்துவிட்ட தத்தான்! நீங்கள்
எழுதிவிட்டீர், ''நெஞ்சுறுதி கொள்வாய்' என்றே!
அருள்வேண்டிப் பின்வந்து விட்ட தத்தான்.
அந்நொடியே என்நெஞ்சும். நெஞ்சிங் கில்லை!
வருகைக்குக் காத்திருக்கும் விழிகட் கென்னை
வாட்டுகின்ற தன்மையுண்டு! தேற்றல் இல்லை!

நீர்க்குடத்தைத் தூக்குகையில் உங்கள் எண்ணம்!
நினையாமல் இருப்பதற்கு முயற்சி செய்வேன்!
பார்க்குமிடம் எங்கணுமே அமர்ந்தி ருப்பீர்:
பழயகதை, உங்கள்குரல் நெஞ்சைச் சுற்ற,
ஊர்க்கிணற்றில், பெண்களெல்லாம் என்னைக்கண்டே
உதடவிழ, நகையுதிர்க்க நிலைத்து நிற்பேன்!
ஆர்க்கிடையில் உங்கள்முகம் இல்லை; உங்கள்
அழகுமுகக் கண்களிலே நான்தான் இல்லை!

உயிரெல்லாம் அங்கென்றன் உடல்தான் இங்கே!
உணவில்லை; உறக்கமில்லை அத்தான்! வாழும்
பயிருண்டோ நீரின்றி! என்றன் உள்ளம்
படும்பாடு நீர்பட்டால் வருவீ ரன்றே!
அயரும்வரை உடல்வருத்தி வேலைசெய்தும்,
அரைநொடியும் கண்மூடி அயர்வ தில்லை!
பெயருக்கேன் வருந்துவதாய்க் கடிதம் தீட்டிப்
பேரரச மரத்துக்கல் லாகி விட்டீர்!

நான்சிறிது மறந்தாலும், பாலுக் கென்னை
நாடிவரும் குழந்தைதன் எழிலில் உங்கள்,
மானுடலின் நிறங்கண்டும், உருவைக் கண்டும்
மாளாமல் நீர் சொரியும் கண்க ளோடே
ஏன் வாழ வேண்டும்நான், அத்தான்? என்னை
ஏன் மாள வைக்கின்றீர்? முகிலில் ஏறி
வான்வழியே வந்திறங்கிப் பேதை யென்னை
வாரியணைத் திடுதற்கு வாரீர் இன்றே.

—[துரை. மாணிக்கம்]—

சென்ற இதழ்த் தொடர்ச்சி:

பெயர் தெரியாப் புலவர்க்குப் பெயர் கொடுத்த பாக்கள்

விட்ட குதிரையார்: (வெண்ணெய் வேலன்)

'விட்ட குதிரையார்' என்பது ஒரு புலவரின் பெயர். குறிஞ்சிநாடாம் மலைநாட்டுள் மூங்கிற் காடுகள் அதிகம். இளைய மூங்கிலை வளைத்துத் தின்கின்றது யானை யொன்று. வளைத்துத் தின்னும்போது பிடி நழுவி மூங்கில் 'விர்' என்று மேலெழுந்து செல்லுகிறது. இது எவ்வாறிருக்கிறதென்றால், வண்டியில் பூட்டிய குதிரையை அவிழ்த்து விட்ட உடனே அது எவ்வாறு வேகமாகத் துள்ளிக் குதித்தோடுமோ அதைப்போன்றிருக்கிறது. இவ்வியற்கைக் காட்சியைக் கண்ட குறிஞ்சி நாட்டிளைஞன் ஒருவன் கட்டழகு மேனிகுலையா நங்கையொருத்தியைக் கண்டான். அவளும் கண்டாள். கண்ணொடு கண் பேசிய காரணத்தால் காதல் கொண்டனர்; தலைவி தன் காதலைப்பற்றித் தன் தோழியிடம் சொல்லிக் கவலுற்றாள். தோழியும் அவளைத் தேற்றினாள். காதலன் ஒருநாள் வந்தான். அவனும் தோழியிடம் தன்னுடைய காதலைப் பற்றிக் கூறினான். அவனுக்கும் "ஆகட்டும் சற்றுப்பொறுங்கள்," என்றாள். தலைவியிடம் தோழி வந்து, "அம்மா உம் காதலர் இவண் வந்து சென்றார்" என்றதுதான் தாழ்த்தம். உடனே தலைவி, "ஏனடி தோழி, வந்து என்னடி சொன்னார்?" என்றாள் பரபரப்புடன். தோழியும் எல்லாம் உனக்கு வெற்றிதானம்மா. நீ கண்ணி வைக்காமலேயே அவர் உங்கள் வலையிலே சிக்கித் தொல்லைப் படுகிறார்" என்றாள்

இதைப்புலவன், செய்யுளால் தரும் செம்மையைப் பாருங்கள்.

"விட்டகுதிரை விசைப்பின் அன்ன,
விசும்பு தோய் பசுங் கழைக் குன்ற நாடன்
யாம் தற் படர்ந்தமை அறியான், தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்ப—நம்மான் நலம் நயந்தே"

(குறுந் தொகை—74)

இதில் உள்ள விட்ட குதிரை என்ற இனிய சொல்லே அப்புலவரின் பெயராயிற்று.

மீனெறி தூண்டிலார்:

மற்றுமொரு புலவர்க்கு மீனெறி தூண்டிலார் என்ற பெயர் அமைந்திருத்தலினால் ப டி க் கு ந் தோ று ம் படிக்குந் தோறும் வாய் மணக்கிறது. இவர் இயற்பெயர் யாதோ? எங்குப் பிறந்தாரோ? என்பவெல்லாம் மறைந்து கிடக்கின்றன என்றாலும், அவர் அள்ளித்தந்த தெள்ளிய தமிழ் அழிந்துபடவில்லை. இவரை வாழ்வித்து அப்பாடலும் வாழ்கின்றது.

"யானே ஈண்டையேனே; என் நலனே
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு, ஆண்டு, ஒழிந்தன்றே.

(குறுந்தொகை—54)

இப்பாடலின் பொதுவான கருத்தோட்டம் என்னையெனின் "மூங்கிற் புதரில் இளங்குருத்தாயிருந்த ஒன்றை யானை ஒன்று துதிக்கையால் பிடித்து வளைக்கும்போது, தினைப்புனங் காப்பவர், கவண் வீசி விரட்டுகின்றனர். அது மூங்கிலை விட்டு விட்டு ஓடும்போது எப்படி அது நிமிர்கின்றதோ அதைப்போலும், தூண்டில் ஒருவன்போட, அதில் மீன்வந்து அகப்பட்டதும், அதை அவன் எப்படி இழுக்கிறானோ அதைப்போலும், என்னைத் தொட்ட அவன் என் கட்டழகையும் நுகர்ந்து விரைந்துவிட்டான். அதுவும் ஆண்டு அழிந்தது. நான் இன்று தூண்டில் பட்ட மீன்போலத் துடிக்கின்றேன். என்னைக் கைப்பிடித்து, இன்பம் துய்த்துச் சென்ற அவன், என்னைநாடி இங்கு என்று வருகின்றானோ, அன்றுதான் என் அழகும் உயிரும் நிலைக்கும் என்று தன் தோழியிடம் கூறுவதாகப் புலவர் பாடிய பாடல் அமைந்துள்ளது.

இத்தகைய அழகுமிக்கக் கருத்தைக்கூறிய புலவரின் இயற்பெயர் யாதோ? எனினும் 'மீனெறி தூண்டிலார்' என்ற பெயரும் சொல்வதற்கு இனிமைபயக்கும் தேனுரைத் தமிழாக வன்றோ இனிக்கிறது!

செம்புலப்பெயல்நீரார்·

"முன்பின் ஒருவரையொருவர் கண்டறியாத இரு தந்தையர்க்குப்பிறந்த, காளையும் நங்கையும் கண்ணொடு கண் பேசிக் கருத்தொருமித்துச் செம்புலத்தில் பெய்த நீர் போல் உள்ளங்களால் ஒன்றுபட்டனர்." என்ற கருத்தை அமைத்துச் செய்யுளை யாத்தவர் பெயர்தான் 'செம்புலப் பெயனீரார்' என்பது.

பாடலின் உயிரோட்டமாய் — கருப்பொருளாய் அமைந்த செம் புலப் பெயல்நீர் என்பது, செய்யுள் யாத்த புலவர்க்குப் பெய ராய் அமைத்து விட்டது. பெயர்கொடுத்த பாடலைப் படியுங்கள்.

"யாயும் ஞாயும் யாரா கிய ரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே."
(குறுந்தொகை – 40)

நெடு வெண்ணிலவினார்:

தமிழ்ப் புலவர் ஒருவரின் பெயர்தான் இது. இது அவர் இயற் பெயரன்று. அவரளித்த பாடல் கொடுத்த பைந்தமிழ்ப் பெயரே இது. இவருக்குத் தாயும் தந்தையும் வைத்து அழைக் காத பெயரை, இன்று தமிழுலகம் வாய்குளிர வெண்ணிலவி னார் என்று அழைக்கின்றது.

இப்புலவர் பாடிய பாடலின் கருத்தைப் பார்ப்போம். ஒருத்திமேல் ஒருவன் காதல் கொண்டான். காதல்கொண்ட அவன் ஒருவருக்குந் தெரியாமல் இரவிலே வந்து பேசி இன்பங் கண்டு வந்தான். "இப்படியே இவனது வழக்கம் நீடிக்குமானால் ஊரார் அலருரைப்பார், தலைவியின் எண்ணமும் வெற்றிபெறாது" என்று கருதிய தலைவியின் தோழி, அவனை எப்படியேனும் நிறுத்த முயற்சித்தாள். இதை அவனிடம் நேராகச் சொல்லா மல் நிலவை நோக்கிக் கூறுவதுபோல் கூறுகின்றாள். "மரங் களடர்ந்த காட்டிடையில், வேங்கை மரங்களின் மலர் கரும் பாறையின் மீதுதிர்ந்து வெம்புலிபோல் தோன்றுங் காட்சியைக் கண்டும், அவன் அஞ்சாது களவு முறையில் தலைவியைக் காண வருகின்றான். நீயே அவனுக்கு அக்காட்சியைக் காட்டி அவன் அஞ்சாது வரத் துணைசெய்கின்றாய். ஆகையினால் நெடிய விசும்பில் நீந்திச் செல்லும் வெண்ணிலவே! நீ அவனோடுகூடிய சிற்சில கால் நல்லையாயினும் இக்காரணத்தால் நீ நல்லையும் அல்லை" என்று தோழி கூறுவதாகப் பாடிய பாடலில் உள்ள நெடுவெண்ணிலவு என்பதன் சிறப்புக் கருதி 'நெடுவெண் ணிலவினார்.' என்ற அழகுமிக்க பெயர் அப்புலவர்க்கு ஏற்பட் டது. இக்கருத்துக்கொண்ட பாடல் இது.

"கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை — நெடுவெண் ணிலவே"
(குறுந்தொகை - 47)

அணிலாடு முன்றிலார்:

பாலை நிலத்திலே யாரும் குடியற்ற ஒரு வீட்டின் முற்றத்திலே இரண்டு அணில்கள் சேர்வது எத்தகைய இனிமை! அந்தத் தனிமையின் இன்பமே ஒன்றையொன்று பிரிந்தகாலை பெருத்த துன்பமாகப் போகின்றதன்றோ? அதைப்போன்று, தலைவனைப் பிரிந்து தனித்து இருக்கின்றாள் ஒருத்தி. காதலன் அவளோடு இருந்தகாலை அவளுக்கு அத்தனிமையே மகிழ்ச்சி தந்தது. ஆனால் அவனில்லாதிருக்கும் இக்காலை, தனி வீட்டின் முற்றத்தில் தனித்த ஒரு அணில் போல்தான் தன் நிலையும் இருக்கின்றது'' என்பதைத் தலைவி தன் தோழியிடம் கூறுவது போன்று அமைந்துள்ளது பாடல். இப்பாடலில் உள்ள அணிலாடு முன்றில்' என்ற அழகுத் தமிழ்ச் சொல்லையே பாடிய புலவர்க்கு இட்டழைத்தது சிறப்பன்றோ?

''காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து,
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் – தோழி! அவர் அகன்ற ஞான்றே''

(குறுந்தொகை - 41)

ஓரேருழவனார்:

காதலன் பொருள்வயிற் பிரிந்து சென்றான். காதலியைப் பிரிந்த காதலன் நெடுநாட்கள் திரும்பாமல், குறித்த பொருளை வேண்டுமட்டும் ஈட்டிய பின்றைக் காதலியை நோக்கித் திரும்புகின்றான் விரைவாக. இதற்குமுன் அவன் நெஞ்சம் புயல்போல் விரைந்து முன்னே ஓடுகின்றது. அவன் வரும்வழியிலே ஓர் ஏர் கொண்டு தன் நிலத்தை மிக விரைவாக உழுகின்றான்ஒருவன். ஈரம் உலருமுன்பே, அந்நிலத்தை உழவேண்டும். இருப்பதோ ஓர் ஏர். அதைக்கொண்டு உழுது பயிர்செய்து, பலன்காணவேண்டுமென்பது, அவன் விருப்பம். அவன்போல் தானும் விரைந்து போவதை எண்ணிப் பார்க்கின்றான். அவன் காதலி இளமையுடையவள். அவ்விளமை மாறி முதுமையடையுமுன்பே இன்பம் பெறும் விழைவால் அவன் விரைகின்றான். அவன் நெஞ்சப் பதைப்பு நன்கு புலப்படுகின்றது. இவ்வினிய பாடலால் அவர் 'ஓரேருழவனார்' எனப் பெயர் பெற்றமை மகிழத் தக்கதே, அப்பாடல் இது.

"ஆடு அமை புரையும் வனப்பின் பணைத்தோட்
பேர் அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆர் இடையதுவே; நெஞ்சே
ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போல
பெரு விதுப்பு உற்றன்றால்; நோகோ யானே"

(குறுந்தொகை–131)

ஓரிற் பிச்சையார்:

மணமாகி ஓரிரு திங்களே ஆயின. பொருள்தேடப் புறப்பட்ட தலைவன், ஒரு நாள் தன் காதற் கிழத்தியிடம் விடை கேட்கின்றான். 'சென்று என்று வருவீர்' என்று குரல் மங்கக் கேட்டாள் மனைவி. அவனும் 'வாடை வருங்கால் வருவேன்' என்று பிரியாமற் பிரிந்தான். அவன் சென்ற நாள்முதல் வாடை யாண்டு வரும்; யாண்டு வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டே நாட்களைக் கழித்தாள் அவள்.

ஒருநாள் இல்லிரந்து புசிக்கும் ஓர் இரவோன் அவ்வழி வரக்கண்டு, அவனை விளித்து, "ஐயா குற்றமில்லாத தெருவில், நாய்இல்லாத வீட்டில். செங்நெல் அரிசிச்சோற்றில் வெண்மை யான நெய்விட்டுச் சாப்பிடத் தங்கட்குக் கிடைப்பதாக. நிறைய உண்டு, பனிக்காலத்துக்கு வேண்டிய வெந்நீரும் பெறுவீராக. மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை எக்கால் வருவது? அக்கால் வருவர் எம் காதலரே" என்று ஓர் இல் பிச்சைக்கார ரிடம் வாடை வரும் நாளைக் கேட்ட செய்தியை 'ஓரிற்பிச்சை யார்' என்று பாடலாற் பெயர்பெற்ற புலவர் ஒருவர் விளம்பு கின்றார். இல்லத்திலே பிச்சைகேட்டு வாங்கியுண்ணும் ஒருவ னைத் தம் பாவில் வைத்துப் பாடியமையால் இவருக்கு 'ஓரிற் பிச்சையார் என்ற பெயர் விளங்குவதாயிற்று; அப்பாடல் இது. ('பிச்சை' என்பது வடசொல்.)

"ஆசு இல் தெருவின் ஆசுஇல் வியன் கடை
செந்நெல் அமலை வெண்மை வெள் இழுது
ஓர் இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ, நீயே—
'மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை,
எக்கால் வருவது? என்றி;
அக்கால் வருவர், எம் காதலோரே,"

(குறுந்தொகை-277)

(தொடரும்)

இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றோம்.

வள்ளுவர் பதிப்பகம்

நெல்லிக்குப்பம்,
(தெ. ஆ.)
தமிழ்நாடு.

தென்மொழி
விளம்பரக் கட்டணம்.

—

அட்டை நான்காவது பக்கம்
முழுமையும் ரூ. 50-00
,, இரண்டாவது
அரைப்பக்கம் ரூ. 25-00
,, மூன்றாவது
முழுப்பக்கம் ரூ. 40-00
,, அரைப்பக்கம் ரூ. 20-00
உள்ளே முழுப்பக்கம் ரூ. 30-00
,, அரைப்பக்கம் ரூ. 15-00
,, கால்பக்கம் ரூ 8-00

வரி விளம்பரங்களுக்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்
தென்மொழி
நெல்லிக்குப்பம்,
தெ. ஆ.மாவட்டம் (தமிழ்நாடு)

உங்கள் நிறைவே எங்கள் நிறைவு!

சிறு அறிக்கைகள்
முதல்
நூல்கள் வரை
தெளிவாகவும் எடுப்பாகவும்
அச்சிட்டுத் தருகின்றோம

உறுதியானநூற் கட்டடங்களும்
(Binding)
குறித்த காலத்தில் செய்து தரப்படும்

குரு அச்சகம்
நெல்லிக்குப்பம்.

பொங்கல் இதழ்.

* மலர் பொங்கலன்று எங்கும் கிடைக்கும்.
* இதழில் வரும் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இனிய கருத்துக் கதைகளும், உள்ளத்தைத் தொடும் அருமைப் பாடல்களும், மற்றும் பல நறுக்குச் செய்திகளும் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியனவாகும்.
* தனிமலர் விலை ஒன்றரை உருபா.
* உறுப்பினர்க்கு மலர்கள் அனுப்பப்பெறமாட்டா, இவ்வறிக்கை கண்ட ஒரு கிழமைக்குள் ஒன்றரை உருபா அனுப்பிப் பதிவு செய்யும் உறுப்பினர்க்கே மலர் (பதிவஞ்சலில்) அனுப்பப்பெறும்.
* தனிப்பட்டோர் மலர் வேண்டின், இரண்டு உருபா அனுப்பி, ஒரு கிழமைக்குள் பதிவுசெய்து கொண்டாலல்லாது மலர் கிடைக்காது 25-12-59க்குள் உறுப்பினர் ஆவோர்க்கு, ஒன்றரை உருபாச் செலவிலேயே மலர் அனுப்பப்பெறும்.
* விற்பனையாளர் வேண்டும் இதழ்களின் எண்ணிக்கையை ஒரு கிழமைக்குள், இதழ் ஒன்றிற்கு ஒரு உருபா முன்பணத்துடன் அறிவித்துப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாதார்க்கு இதழ்கள் உறுதியாக அனுப்பப்பெற மாட்டா.
* வேண்டிய அளவான இதழ்களே அச்சிடப் பெறுவதால், மேற்கண்ட முறைகட் குட்படாத எவர்க்கும், எவ்வகையானும் மலர் அனுப்பப் பெறுது.
* மலர் வெளியீட்டுச் சிறப்புக் கருதி, மார்கழி இரண்டாம் இதழ் நிறுத்தப் பெற்றிருக்கின்றது.
* மலர்க்கென கட்டுரை, கதை, பாடல்கள் அனுப்புவோர் 20-12-59க்குள் அனுப்பி வைக்கவேண்டுகின்றோம்.

அமைச்சர்,

தென்மொழி, நெல்லிக்குப்பம். தெ.ஆ.மாவட்டம்

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டுப், பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.